**2 கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**
**O.S.No.500/2019**

19.06.2026 வா.சா. 1 திருமதி.பாத்திமா பீவி

(வா.சா.1 ன் சாட்சிய வாக்குமூலம் உதவியாளரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.)

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. வழக்கு சொத்து விபரம் என்ன என்றால் அது ஒரு பாதை. அந்த சொத்தின் அருகில் எனக்கு எந்த சொத்து உள்ளது என்பதைக் காட்ட நான் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சர்வே எண் 417 என்ற பூர்விக சொத்து உள்ளது. சர்வே எண் 417 ல் எனக்கு உரிமை இருப்பதாக வழக்குரையில் நான் கூறவில்லை என்றால் நான் கிரையம் பெற்ற சொத்து அது. கிரையம் பெற்ற விபரம் பற்றி வழக்கில் எதுவும் கூறவில்லை என்றால் சரிதான். ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். எனது ஆவணங்களைப் பார்த்தால் மட்டுமே வழக்குச் சொத்தில் எனக்கு பாதை உரிமை உள்ளதா என்று தெரியும் என்றால் சரிதான்.

2. வழக்குச் சொத்தைப் பாதையைப் பொறுத்து எங்களது ஆவணத்தில் எந்த விபரமும் இல்லை என்பதால் தான் அந்த ஆவணத்தை பிராதில் குறிப்பிடவும் இல்லை ஆவணம் தாக்கல் செய்யவும் இல்லை என்றால் சரியல்ல. வழக்குச் சொத்துப் பாதையின் அளவுகள் கிழமேல் தென்பக்கம் 4.2 மீட்டர் வடப்பக்கம் 6.2 மீ. நீளம் எனக்கு தெரியாது. எனக்கு சொத்து விபரங்கள் தெரியாமலே இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே தான் வழக்குச் சொத்தின் அளவுகளை தவறாகக் கூறுகிறேன் என்றால் சரியல்ல.

3. பிராது தபசில் சொத்தை நீதிமன்ற ஆணையர் அளக்கும் போது நான் உடனிருந்தேன். அவ்வாறு ஆணையர் அளக்கும் போது வடதலை 2.4 மீ என்றும் தென்தலை 2.2 மீ என்றும் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். பாதையினுடைய மேல்பக்க வீடுகளின் கீழ்ப்பக்கச் சுவர் ஒரே நேர்வரிசையில் உள்ளது என்றால் சரிதான். பிராது தபசில் சொத்தின் மேற்குப் பக்கம் உள்ள வீட்டின் வரிசையில் தான் 1ம் பிரதிவாதியின் சர்வே எண் 504/10 வீடும்

உள்ளது என்றால் சரிதான். ஆணையர் இடங்களை அளக்கும் போது தபசில் சொத்தின் வடபக்க, தென்பக்க கிழமேல் அளவுகள் மட்டும் தான் அளந்து மத்தியில் 1ம் பிரதிவாதியின் வீடு அமைந்துள்ள பகுதியில் பாதையின் கிழமேல் அளவு அளக்கவும் இல்லை குறிப்பிடவும் இல்லை என்றால் அளந்தது எனக்கு நியாபகமில்லை.

4. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 வழக்கில் யாருக்கிடையே நடைபெற்றது என்றால் எங்களுக்கும் கபீர் என்பவருக்கும் இடையே நடைபெற்றது. இந்த வழக்கில் உள்ள 2ம் பிரதிவாதி கபீர் என்றால் சரிதான். அந்த வழக்கில் கபீர் என்பவர் தரப்பினராகக் காட்டப்படவில்லை என்றால் அந்த வழக்கை பற்றி எனக்கு சரியாக நியாபகமில்லை. அந்த வழக்கில் உள்ள சொத்திற்கும் இந்த வழக்கில் உள்ள சொத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் எனக்குத் தெரியாது. நான் அ.வ.எண்.407/2015 வழக்கில் ஆணையர் இடத்தை அளந்த போது தான் இந்த வழக்கின் வாதியான எனது கணவருக்கு தெரிய வந்தது என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கின் ஆணையர் அறிக்கையை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு தெரியாது.

5. அ.வ.எண்.407/2015 வழக்கை தாக்கல் செய்ததால் தான் இந்த வழக்கை எனது கணவர் தாக்கல் செய்துள்ளார் என்றாலும் இந்த வழக்கிற்கு எந்த வழக்கு மூலமும் இல்லை என்றாலும் சரியல்ல. 1ம் பிரதிவாதி தபசில் சொத்தை ஆக்கிரமித்ததாக அ.வ.எண்.407/2015ல் ஆணையர் அளந்த போது தெரிய வந்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தபசில் சொத்தில் எந்த வித ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கின் ஆணையர் அறிக்கை சரியான முறையில் இல்லை என்றும் ஆணையர் அறிக்கை தவறானது என்றாலும் சரியல்ல. இந்த வழக்கின் ஆணையர் அறிக்கை நிராகரிக்கப்பட வேண்டும் என்றால் எனக்கு தெரியாது. ஆணையர் அறிக்கையில் 1ம் பிரதிவாதியின் கீழ்ப்பக்கச் சுவர் தபசில் சொத்தில் இருப்பதாக தவறாகக் கூறியுள்ளார் என்றால் சரியல்ல.

6. ஆணையர் தாவா சொத்தை சரியாக அளந்து இருந்தால் 1ம் பிரதிவாதியின் கீழ்ப்பக்கச் சுவர் பாதையில் இல்லை என்பது தெரிய வந்திருக்கும் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தபசில் சொத்தில் எந்த விதி ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் 1ம் பிரதிவாதி தாவா சொத்தில் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. 1ம்

பிரதிவாதி வழக்கு சொத்தில் எந்த வித ஆக்கிரமிப்பும் செய்யாததால் 1ம் பிரதிவாதியின் செலவுத் தொகையுடன் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

7. எனக்கு தபசில் சொத்தான பாதையில் எந்த வித உரிமையும் இல்லாததால் இவ்வழக்கில் நான் கேட்டுள்ள விளம்புகை பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு சொத்தில் எந்த உரிமையும் இல்லாததால் தான் எந்த உரிமை ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ஆவணத்தில் காட்டியுள்ளவாறு ஸ்தலத்தில் இல்லை என்றும் அந்த மாதிரி வரைபடம் வழக்கிற்காக பொய்யாக தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல.

Deposition uploaded on 19.06.2026.

PRIYADHARSINI
RAMAKRISHNAN
LISAMMAL

Digitally signed by PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
Date: 2026.06.19 18:24:04 +0530

2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.